**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.283/2023**

**வா.சா.2– பிரிட்டோ ஞானபிரகாசம் , த/பெ.பிரான்சிஸ்**

**நாள். 13.08.2026**

**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் ஐடிஐ படித்து விட்டு டிரைவராக உள்ளேன். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதியை 4,5 வருடங்களாக தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் ஜல்லி , மணல், செங்கல் தொழில் செய்து வருவதால் தொழில் ரீதியாக அவரை தெரியும். பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எந்த தேதியில் பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கினார் என்றால் 18.11.2022 ஆகும். மேற்படி தேதியை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா புரோநோட்டை தவிர இதற்கு முன்னால் வேறு புரோநோட்டுக்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா புரோநோட்டை யார் வாங்கினார் என்றால் பிரதிவாதி லூயிஸ் வாங்கினார். லூயிஸ் புரோநோட்டை வாங்கியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா புரோநோட்டை எழுதியதை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் புரோநோட்டில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 1 கையெழுத்து போட்டேன், 2 வது சாட்சியாக கையெழுத்து செய்தேன். பிரதிவாதி வாதியிடம் எவ்வளவு தொகை பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் என் முன்னிலையில் ரூ.3 லட்சம் கொடுக்கப்பட்டது, அதற்கு முன்பு கொடுத்த தொகைக்கும் புரோநோட் சேர்த்து எழுதப்பட்டது. புரோநோட்டை என் முன்னிலையில்தான் பிரதிவாதியின் நண்பர் ஒருவர் எழுதினார் அவர் பெயர் தெரியவில்லை. என்னுடன் இன்னொரு சாட்சி கையெழுத்திட்ட நபர் ஆன்டோ அவர் எனக்கு ஏற்கனவே தெரிந்த நபர்தான். பிரதிவாதி 3 தவணைகளாக வாங்கியதாக சொல்வதற்கு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி எந்த முகவரியில் உள்ளார் என்றால் வாழைக்காய்பட்டி, முத்தமிழ் நகரில் இருந்தார். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் பொறியியல் படித்துள்ளார். பிரதிவாதி படித்துள்ளதால் அவர் எழுதியிருக்கலாம் என்றால் அவர் நண்பர்தான் எழுதினார். உண்மையில் நான் சொன்னது போல் பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி புரோநோட்டில் எத்தனை கையெழுத்து போட்டார் என்பது தெரியுமா என்றால் ஒரு கையெழுத்துதான் போட்டார்.

புரோநோட்டில் ரேகை வைத்துள்ளாரா என்றால் இல்லை. புரோநோட்டு எழுதியதாக சொல்லும் தேதியில் எத்தனை மணிக்கு பணம் பெற்றார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புரோநோட் எழுதும் போது பிரதிவாதியின் மனைவியும் வந்திருந்தார், இந்த விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்னமாதிரி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் வாதி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.13 18:06:41 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.